செ.வெ.எண்: 115 நாள்:24.02.2018

**திருநெல்வேலியில் TNPSC Combined Engineering Services தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்தார்.**

---

திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் TNPSC Combined Engineering Services தேர்வு இன்று (24.02.2018) நடைபெற்றது. தேர்வு திருநெல்வேலியில் 7 கல்வி நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள 9 மையங்களில் நடைபெறுகிறது. 3104 தேர்வர்கள் தேர்வு எழுத விண்ணப்பித்துள்ளனர். தேர்வு நடைபெறும் மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

தேர்வு மையங்களில் தேர்வு எழுதுபவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது என்பதையும் தேர்வு மையங்கள் வீடியோ கேமரா மூலம் கண்காணிக்கப்படுகிறதா என்பதையும் போதிய காவல் பாதுகாப்பு ஏற்படுகள் செய்யப்பட்டுள்ளதா என்பதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.